இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 76 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 08 – வெள்ளிக்கிழமை 25 அக்டோபர் 2024 – திருச்சி ★★ 12+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 76 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 08 - Friday 25 October 2024 - Trichy ★★ 12+12 Pages ₹ 5.00


## திருவள்ளூர் மாவட்டத்தை கழகக் கோட்டையாக்கியவர் கி.வேணு!

# கழக அரசு இன்றைக்கு மக்கள் போற்றும் அரசாகத் திகழ்கிறது!

### கும்மிடிப்பூண்டி கி.வேணு பேரன் திருமணத்தை நடத்தி வைத்து தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

**சென்னை, அக்.25-**

**திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் பேரன் திருமணத்தை நடத்தி வைத்து தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை யாற்றுகையில், “திருவள்ளூர் மாவட்டத்தை கழகக் கோட்டையாக்கியவர் கி.வேணு” எனவும், “இன்றைக்கு கழக அரசு மக்கள்போற்றும் அரசாகத் திகழ்கிறது” எனவும் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் சட் டமன்ற முன்னாள் உறுப்பினர் மறைந்த கும்மிடிப் பூண்டி கி.வேணு அவர்களு டைய பேரனும், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி. உமா மகேஸ்வரி மகனு மான கோ.ஸ்டாலின் – யுவஸ்ரீ ஆகியோரது திருமணத்தை தலை மையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி ஆற்றிய உரை வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பண்பாக்கத்தைச் சார்ந்த நம்மு டைய நினைவில் வாழக்கூடிய கி.வேணு – பத்மாவதி அவர்களுடைய மகள் வழி பேரன் மணமகன் கோ.ஸ்டாலின் அவர் களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத் தூர் வட்டம், மாங்காடு குளமுனிவாக்கத் தைச் சார்ந்த நினைவில் வாழும் வடிவேல் – மங்கையர்க்கரசி ஆகியோருடைய மகன் வழி பேத்தி யுவஸ்ரீ அவர்களுக்கும் நம்மு டைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறி இருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சிக்கு தலை மைப் பொறுப்பேற்று, மணவிழாவை நடத்தி வைத்து அதேநேரத்தில், மணமக் களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படு கிறேன்.

**கழகத்திற்கு வலுசேர்க்கின்ற சிப்பாயாக விளங்கியவர் கி.வேணு!**

நம்முடைய வேணு அவர்கள் எப்படி யெல்லாம் இந்த இயக்கத்திற்கு பாடுபட்டி ருக்கிறார்; பணியாற்றியிருக்கிறார். அவரைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் கழகத்தின் சிப் பாயாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நேரத்திலும், கழக நிகழ்ச்சியில் தொடர்ந்து பங்கேற்று, கழகத்திற்கு வலுசேர்க்கின்ற வகையில் பணியாற்றி இருக்கக்கூடியவர் நம்முடைய வேணு அவர்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களு டைய product. அவர் என்ன சொன்னாலும் தட்டமாட்டார். அந்த அளவிற்கு ஒரு சிஷ்ய னாக விளங்கியவர். ஆனால், அதே மதுராந் தகம் ஆறுமுகம் அவர்கள் கொஞ்சம் இந்த இயக்கத்திலிருந்து விலகி இருந்த நேரத்தில், அவர் விலகிச் சென்றாலும், நான் விலக மாட்டேன், கழகத்தோடு தான் இருப்பேன், தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் தான் இருப்பேன் என்று அந்த வைராக்கியத் தோடு இருந்தவர் நம்முடைய வேணு அவர்கள். அதன் பிறகு மதுராந்தகம் ஆறு முகம் அவர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து விட்டார் அது வேறு. ஆனால் எதற்காக நான் சொல்கின்றேன் என்று சொன்னால், கழகம்தான்; கலைஞர் தான் தன்னுடைய மூச்சு என்று இறுதிவரை பணியாற்றிய ஒரு சிறப்பான தொண்டர் நம்முடைய வேணு அவர்கள். ஆகவே, இது வேணு அவர்களுடைய திருமணம் என்பது மட்டு மல்ல, நம்முடைய குடும்ப திருமணம். நம் முடைய குடும்ப திருமணம் என்று சொல் வதைவிட, ஒரு கழக குடும்ப திருமணம். கழகக் குடும்பத்தில் நடைபெறக்கூடிய இந்த திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதில் நாமெல் லாம் பெருமைப்படுகிறோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களுடைய பேரனும், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி. உமா மகேஸ்வரி மகனுமான கோ.ஸ்டாலின் – யுவஸ்ரீ ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, திருமதி. துர்கா ஸ்டாலின், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தி.மு.க. கூட்டணி உடைகிறது என ஜோசியம் கூறும் பழனிசாமி விரக்தியின் எல்லைக்கே சென்று பேசுகிறார்!

**கழகத்திற்காக எந்த தியாகமும் செய்யக் கூடியவர்!**

குருதனம்பேடு கிராமத்தில் தொடக்க காலத்தில் கழகத்தின் கிளைக் கழகச் செயலாளராக தன்னுடைய பணியை தொடங்கிய நம்முடைய வேணு அவர்கள், 1973ஆம் ஆண்டு கும்மிடிபூண்டி ஒன்றி யக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று, அதைத் தொடர்ந்து, தலைமைக் கழகத் தின் செயற்குழு உறுப்பினராகவும், கழகத் தின் உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப் பினராகவும், திருவள்ளூர் மாவட்டம் என்று பிரிந்த நேரத்தில், அந்த பிரிந்த திருவள்ளூர் மாவட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று, நான்கு முறை மாவட்டச் செயலாளராக இருந்து பணியாற்றிருக்கிறார். நான்கு முறை இந்த மாவட்டத்தின் செயலாளராக பொறுப்பேற்ற நேரத்தில்தான் இந்த மாவட்டம் கழகத்தின் கோட்டையாக மாறக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

**மாவட்ட அளவில் மக்களின் அன்பைப் பெற்றவர் கி.வேணு!**

எந்த போராட்டமாக இருந்தாலும் சரி, எந்த சிறைச்சாலையாக இருந்தாலும் சரி, அந்த நிலைகளை எல்லாம் பற்றிக் கவ லைப்படாமல், இன்னும் சொல்லவேண் டும் என்றால் இங்கே பாலு அவர்கள் சொன் னது போல, எங்களுடன் ஓராண்டு காலம் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை யில் இருந்தவர்தான் நம்முடைய வேணு அவர்கள். அந்த நேரத்தில் மிசாவில் நாங்கள் எல்லாம் அடைபட்ட நேரத்தில் எங்களுக்கெல்லாம், உற்றத் தோழனாக, உற்ற நண்பனாக, உற்ற சகோதரனாக, எங்களை எல்லாம் பாதுகாக்கக்கூடிய ஒரு சிறந்த செயல் வீரனாக சிறைச்சாலையில் விளங்கியவர்.

> **“ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க.வை பொறுத்தவரைக்கும், கூட்டணி என்று சொன்னால், அது கொள்கை கூட்டணி யாக மட்டுமல்ல, மக்கள் கூட்டணியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. கனவு காணவேண்டாம். உறுதியாக சொல்கிறேன். 2026 மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வரக்கூடிய எந்தத் தேர்தலாக இருந்தாலும் திமுக தான் வெற்றி பெறும் என்பதில் யாருக்கும் எந்தவித சந்தேகம் இருக்க வேண்டியதில்லை.”**

வேணு அவர்கள் கழகப் பணி மட்டுமல்ல, மக்கள் பணியும் ஆற்றிடவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவர் கும்மிடிபூண்டி தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக 1989ஆம் ஆண்டு, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று இந்த கும்மிடிபூண்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை மக்கள் சேவையை ஆற்றி யிருக்கக்கூடியவர். மாவட்ட அளவில், மக்களுடைய அன்பை பெற்றவராக விளங்கியவர் நம்முடைய கும்மிடிபூண்டி வேணு அவர்கள்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

---

## கேரள மாநிலம் – வயநாடு தொகுதி இடைத்தேர்தல்:

# பிரியங்கா காந்தி வேட்பு மனுத் தாக்கல்!

### திருமதி சோனியா காந்தி - ராகுல் காந்தி - மல்லிகார்ஜுன கார்கே பங்கேற்பு!

*திருவனந்தபுரம், அக். 25-*

கேரள மாநிலம் வய நாடு மக்களவை தொகு திக்கு நவம்பர் 13ஆம் இடைத்தேர்தல் நடை பெறுகிறது.

இத்தேர்தலில் காங் கிரஸ் சார்பில் அக்கட்சி யின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி போட்டி யிடுகிறார். முதல் முறை யாக தேர்தல் களம் காணும் பிரியங்கா காந்தி, வயநாட்டில் வேட்பு மனு



தாக்கல் செய்வதற்கு முன்பு, பிரம்மாண்ட பேரணியில் ஈடுபட்டார். ஆயிரக்கணக்கான தொண் டர்களுக்கு மத்தியில், பிரியங்கா காந்தியுடன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், வயநாட்டின் முன்னாள் எம்.பி.யுமான ராகுல் காந்தியும் பேரணி யில் கலந்து கொண்டார்.

கல்பெட்டாவில் தொடங்கிய பேரணியில், வழியெங்கும் திரண்டி ருந்த மக்கள் பிரியங்கா காந்திக்கு உற்சாக வர வேற்பு அளித்தனர்.

பேரணியை தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட் டத்தில், காங்கிரஸ் நாடாளு மன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி, காங் கிரஸ் தலைவர் மல்லிகார் ஜுன கார்கே, எதிர்க்கட் சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி, கடந்த 35 ஆண்டு களாக தனது தந்தை, தாய் மற்றும் சகோதரருக்காக வும், காங்கிரஸ் தலைவர் களுக்காவும் பிரச்சாரம் செய்துள்ளதாக கூறினார். முதல்முறையாக வேட்பா ளராக வந்துள்ள தனக்கு, சேவையாற்ற வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ராகுல்காந்திக்கு வயநாடு மக்கள் வழங்கிய ஆதர வுக்கு தாம் கடமைப்பட் டுள்ளதாகவும் பிரியங்கா காந்தி தெரிவித்தார்.

---

## ஒடிசா - மேற்கு வங்கம் இடையே கரையைக் கடக்கும் ‘டானா’ புயல்:


# தமிழகத்தில் 9 மாவட்டங்களில் கனமழை!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 25–

வங்கக் கடலில் நிலை கொண் டிருந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் புயலாக (டானா) வலு பெற்றது. இது, வடக்கு ஒடிசா மேற்கு வங்க கடற்கரை பகுதி களில், பூரி–சாகர் தீவுகளுக்கு இடையே, தீவிர புயலாக இன்று (25ம் தேதி) காலை கரையை கடக் கக்கூடும்.

இதனிடையே, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நீல கிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங் களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை



வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு: மத் திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலைகொண்டிருந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமானது மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து 5.30 மணி அளவில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுபெற்றது. மேலும் இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து 5.30 மணி அளவில் புயலாக (டானா) வலு பெற்று நிலை கொண்டுள்ளது.

இது மேலும், வடமேற்கு திசை யில் நகர்ந்து, அதிகாலை வாக்கில் வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் தீவிர புயலாக வலுபெறக்கூடும். இது, வடக்கு ஒடிசா – மேற்கு வங்க கடற்கரை பகுதிகளில், பூரி சாகர் தீவுகளுக்கு இடையே, தீவிர புய லாக இன்று (25ம் தேதி) காலை கரையை கடக்கக்கூடும். அச்சமயத் தில் அப்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 100 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையி டையே 120 கிலோ மீட்டர் வேகத் தில் வீசக்கூடும்.

இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.